**ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை-5.**

**முன்னிலை: திரு.த.ஆனந்த்.,இ.ஆ.ப.,**

ந.க.எண். இ6/18090/2008 நாள்.24.01.2024.

பொருள்: பணியாளர் தொகுதி - ஆதிதிராவிடர் நலம் - கடலூர் மாவட்டம் - சேப்பாக்கம் - டாக்டர்.அம்பேத்கர் அரசு ஆதிந (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளியில் பணியில் சேர்ந்து - இளநிலை உதவியாளர் திரு.P.அருள்முருகன் என்பவரது பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு

பார்வை:
1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.இ5/19837/2023-1, நாள். 14.09.2023.
2. அரசாணை நிலை எண்.33, பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள். 08.03.2023
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை:**

கடலூர் மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதியில் சமையலராக பணிபுரிந்து 07.06.2005 அன்று பணியிடையே காலமான திருமதி.P.மணிமேகலை என்வரது மகன் திரு.P.அருள்முருகன் என்பவருக்கு பார்வை 1-இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு கடலூர் மாவட்டம், சேப்பாக்கம், டாக்டர்.அம்பேத்கர் அரசு ஆதிந (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து 20.09.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2-ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு கடலூர் மாவட்டம், சேப்பாக்கம், டாக்டர்.அம்பேத்கர்

அரசு ஆதிந (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து 20.09.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.P.அருள்முருகன் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 20.09.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.P.அருள்முருகன் இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்/- த.ஆனந்த்,

ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

பெறுநர்:

திரு.P.அருள்முருகன்

இளநிலை உதவியாளர்,

டாக்டர்.அம்பேத்கள் அரசு ஆதிந (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளி,

சேப்பாக்கம், கடலூர் மாவட்டம்.

நகல்.

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.
2. தலைமையாசிரியர்,
   டாக்டர்.அம்பேத்கள் அரசு ஆதிந (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளி,
   சேப்பாக்கம், கடலூர் மாவட்டம்-606 302,
3. "இ5" இருக்கை.
4. முக்கிய ஆணைத் தொகுப்பு.